# ALAGU JOTHI ACADEMY

**(An International Standard CBSE Sr.Sec School)**

Ramadan Celebration 2015 -2016

"ஆயிரம் ஆனாலும் மயாவரம் ஆகாது" என்னும் சிறப்புமிக்க காவிரியின் கரையில் அமைதுள்ள மயிலாடுதுரைக்கு அருகில் உள்ள மேலையூர் அழகு ஜோதி அகாடமி பள்ளியின் சார்பாக ரமலான் பண்டிகை கொண்டாட்டம் 16.07.2015 அன்று நடைபெற்றது.

இந்த விழாவை பெருமைப்படுத்த ஜனாப். முகமது அர்சத் மற்றும் ஜனாப். அப்துல் ஹமீது அவர்கள் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று இவ் விழாவை சிறப்பித்தனர்.

இவ்விழாவில் எம் பள்ளி நிறுவனர் திரு. கண்ணன் மற்றும் தாளாளர் திரு. சிவக்குமார், எம் பள்ளி முதல்வர் திரு. நோயல் மணி மற்றும் மழலையர் பள்ளி முதல்வர் திருமதி. ஹேமா ஸ்ரீதர், தொடக்கப்பள்ளி ஒருங்கிணைப்பாளர்கள், மற்றும் ஆசிரியர் பெருமக்கள்,அலுவலர்கள், மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்ச்சியின் தொடக்கமாக சிறப்பு தொழுகை நடைபெற்றது. அதன் பின்னர் எம் பள்ளி மாணவர்கள் இந்து, முஸ்லீம், கிறித்துவ பாகுபாடு இல்லாமல் ஒருவரைஒருவர் கட்டித்தழுவிக் கொண்டு தம் சகோதரத்துவத்தை வெளிப்படுத்தினர்.மாணவர்களின் பங்களிப்பாக ரமலான் பண்டிகையின் சிறப்பினைப்பற்றிய பேச்சானாது பார்வையாளர்களுக்கு மகிழ்ச்சி அளித்தது.

பள்ளியின் நிறுவனர் உயர்திரு.கண்ணன் அவர்களை பற்றிப் ஜனாப். முகமது அர்சத் மற்றும் ஜனாப் . அப்துல் ஹமீது அவர்களும் " இப்பள்ளியனாது எம் மதமும் சம்மதம் என்ற சமத்துத்வத்தை விளக்கும் விதமாக சிறப்பாக அமைதுள்ள்து" என்று தன் உரையில் சிறப்பித்து கூறினார்.

எம் பள்ளியின் நிறுவனர் உயர்திரு.கண்ணன் அவர்களை் எமது பள்ளியில் எம்மதமும் சம்மதம் என்ற செய்தியை அறிவிக்கும் விதமாக அனைத்து பண்டிகைகளும் சிறப்பாக கொண்டாடுவதின் நோக்கத்தில் இந்த ரமலான் பண்டிகையும் இனிதே நடைபெற்றது என்று கூறினார்.
இவ் விழாவின் முடிவில் மாணவ மாணவியர்களுக்கு இனிப்புகள் வழங்கி விழாவினை சிறப்பித்தனர்.